***கவனிக்க.*** *- 2018.07.26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2083 - 2018 අගෝස්තු මස 03 වැනි සිකුරාදා - 2018.08.03

*2083 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1078 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.*** *- இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தம்) சட்ட மூலம் 2018, யூலை மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### *வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*
### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2018, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## அம்பாந்தோட்டை பிரதேச சபை

*அம்பாந்தோட்டை பிரதேச சபையில் வெற்றிடங்களாகியுள்ள கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக ஆட் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள, தென் மாகாணத்தின் நிரந்தர வதிவாளர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| தொடர் இல. | பதவியின் பெயர் | பதவி களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | சாரதி - தரம் III | 01 | PL 3 - 2 016 | க. பொ. த (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஏதேனும் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் வெற்றிடம் நிலவும் மோட்டார் வண்டி வகைகளின் சாரதி பதவிகளுக்கு மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் நிபுணத்துவம் பற்றிய சான்றிதழும் பெற்றிருத்தல் வேண்டும். சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றதன் பின்னர் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |
| 02 | மின்சார தொழில் நுட்பவலர் - தரம் III | 01 | PL 2 - 2 016 | க. பொ. த (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஏதேனும் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் உரிய பதவிக்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு மூன்றாம் நிலை, வாழ்க்கைத் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய வாழ்க்கைத் தொழில் திறமையில் (NVQ) ஆகக் குறைந்தது இரண்டாம் மட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருத்தல். உரிய துறையில் அனுபவம் பெற்றிருத்தல் மேலதிக தகைமை ஆகும். |
| 03 | சுகாதாரத் தொழிலாளி தரம் III | 02 | PL 1 - 2 016 | தரம் 8 (ஆண்டு 9) இல் சித்தி பெற்றிருத்தல். |

**02. ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகள் :**

1. விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
2. விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கம் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;
3. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு முன்னர் 03 வருட காலப்பகுதியில் தென் மாகாண நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;
4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏலவே தென் மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையிலுள்ளோருக்கு வயதெல்லை ஏற்புடைத் தாகாது.) ;

5. ஆட்சேர்த்துக்கொள்ளும் விதிமுறைகளுக்கு அமைய ஒழுங்கு முறையான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி அதில் வழங்கப்படும் ஆகக்கூடிய புள்ளிகள் பெற்றோர் தகைமையுடையவர்களாக தேர்ந்தெடுக்கப்படுவர் ;

6. சாரதி பதவிக்காக விண்ணப்பித்தோர் அனைவரும் சிறந்த கண்பார்வை உடையவராக இருப்பதுடன் பகலிலும் இரவிலும் சேவையாற்றக்கூடிய போதியளவு மனவளம் உள்ளவராகவும் நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

7. ஏலவே அம்பாந்தோட்டை பிரதேச சபையில் அப்பதவிகளில் அமைய, பதிலீடு, ஒப்பந்த அல்லது நாட்சம்பள அடிப்படையின் கீழ் சேவையாற்றுவோருக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படுவதுடன் அவர்கள் தங்கள் நிறுவனத் தலைவர்கள் மூலம் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும் ;

8. இவ்வாட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டதிட்டங்களுக்கும் உள்ளூராட்சி திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கும் அம்பாந்தோட்டை பிரதேச சபையினால் விநியோகிக்கும் மற்றும் காலத்துக்குக் காலம் விநியோகிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டவராக இருத்தல் வேண்டும் ;

9. பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தேவைப்படும் தகைமைகள் யாவற்றையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென்பது இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியன்று அத்தகைமைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

**03. சேவை நியதிகள் :**

(i) இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;

(ii) மேற்கூறப்பட்ட பதவிகளின் கீழ் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவோர் விதவைகள்/தபுதாரிகள் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(iii) ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் ஊழியர்கள் மூன்று வருட கால தகுதிகூர் நிலைக்கு ஆட்படுவர். அக்காலத்திற்குள் வேலை, வரவு, ஒழுக்கம் திருப்திகரமானதாக இருப்பின் தகுதி கூர் கால இறுதியில் சேவை நிரந்தரமாக்கப்படும்.

(iv) அரச மொழிக் கொள்கைக்கு அமைய தேவைப்படும் மொழியில் திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

(v) குற்றச்சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டவராக இருக்கக் கூடாது.

04. விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) தேசிய அடையாள அட்டை ;

(iii) கல்விச் சான்றிதழ், அதியுயர் கல்வித் தகைமைகளை காட்டும் ஏனைய சான்றிதழ்கள் ;

(iv) தங்கள் வதிவை நிரூபிக்கும் பொருட்டு அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பிரதேச செயலாளரின் சிறு கையொப்பத்துடனான கிராம அலுவலர் சான்றிதழ் ;

(v) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ் இரண்டு ;

(vi) சேவை அனுபவ சான்றிதழ்கள் ;

(vii) ஏனைய தகைமைச் சான்றிதழ்கள் ;

**06. விண்ணப்பிக்கும் விதம் :**

*விண்ணப்பதாரிகள் இதில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2018.08.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "தவிசாளர், அம்பாந்தோட்டை பிரதேச சபை, அம்பாந்தோட்டை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**06.** விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றஞ்செய்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்துதல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் அம்பாந்தோட்டை பிரதேச சபையின் தவிசாளருக்கே உரித்தானதாகும்.

காமினீ சமரகுணரத்ன,
தவிசாளர்,
அம்பாந்தோட்டை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
2018, யூலை 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அம்பாந்தோட்டை பிரதேச சபை ............................................................. பதவி**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ..........................................................................

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ..........................................................................

3. நிரந்தர முகவரி : ..........................................................................................................

4. நிரந்தர வதிவிட மாவட்டம் : ..........................................................................................

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

6. பிறந்த திகதி : ஆண்டு ........................... மாதம் :- ...............................திகதி :- ....................................

7. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :-

   வருடங்கள் ........................... மாதங்கள் : .............................. நாட்கள் : ....................................

8. விவாகமானவரா? விவாகமாகாதவரா? : ..........................................................................

9. பால் (ஆண்/பெண்) : ..........................................................................

10. தேசிய இனம் : ..........................................................................

11. நீர் இலங்கை பிரசையா ? (பரம்பரையாகவா அல்லது பதிவு மூலமா என்று குறிப்பிடுக) : ....................................

12. நீர் தண்டனை பெறும் குற்றத்திற்காக நீதிமன்றில் தண்டிக்கப்பட்டவரா? ..................................................

13. தொலைபேசி இலக்கம் : ..............................................

14. கல்வித் தகைமைகள் :

| க. பொ. த. (சா.த.) | க. பொ. த. (உ. த.) |
|---|---|
| .............................................. | .............................................. |
| .............................................. | .............................................. |
| .............................................. | .............................................. |
| .............................................. | .............................................. |
| .............................................. | |
| .............................................. | |
| .............................................. | |
| .............................................. | |

15. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் : ..............................................................................

16. அம்பாந்தோட்டை பிரதேச சபையில் தற்போது சேவையாற்றுகின்றீராயின் :

1. தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................

2. அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ................................................................................

3. அப்பதவியின் தன்மை : நிரந்தர/தற்காலிக/அமய/ஒப்பந்தம்/நாட்சம்பள அடிப்படையிலானதா ஆகியன .................

4. நீர் எப்போதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டவரா? ........................ ...... ...... ......

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிக்கும் விசுவாசத்திற்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கின்றேன். இங்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி .................................

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பவராயின்**
**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந் நிறுவனத்தில் ........................................... ஆக சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ........... ....................................... அவர்களினால் தரப்பட்டுள்ள தகவல்கள் அலுவலக கடித கோவையிற்கு அமைய திருத்தமானது. அவர் இப் பதவிக்கு நியமிக்கப்படுவராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்.

................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : ..................................................................

பதவி : ..................................................................
(பதவி முத்திரை இடவும்)

திகதி : ..................................................................

*8 - 113*

---

**பண்டாரகமை பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

மேல் மாகாணம், பண்டாரகமை பிரதேச சபையில் கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமைகளைக் கொண்டுள்ள, வெற்றிடங்களாயுள்ள பதவிகளுக்குஆட்சேர்த்துக்கொள்ளும்பொருட்டு விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தை தயாரித்து பூர்த்திசெய்து 17.08.2018 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், பண்டாரகமை பிரதேச சபை, பாணந்துறை வீதி, பண்டாரகமை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பண்டாரகமை பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் வசிப்பவர்கள் மற்றும் அப்பிரதேச சபையில் தற்போது அமய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவோரிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | முன்-பள்ளி ஆசிரியர் | ரூபா 27,140-10X300-11X350-10X495-10X600 - ரூபா 45,540 | 01 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டுஅமர்வுகளுக்குமேற்படாமல் கணிதம், ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; மற்றும் |

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (01 பாடத்திலாவது பொது சாதாரண பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்;<br><br>அரச முன்பள்ளி ஆசிரிய பயிற்சி நிறுவனத்தில் அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட (பதிவு செய்யப்பட்ட) முன்பள்ளி ஆசிரிய பயிற்சி நிறுவனத்தில் சிறுவர் கல்வி மற்றும் சிறுவர் அபிவிருத்தி பற்றி 6 மாதத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறி பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல். |
| 2. | சுகாதார நிருவாகத்தர் | ரூபா 27,140-10X300-11X350-10X495-10X600 - ரூபா 45,540 | 02 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் / கணிதம் உட்பட மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்த பெற்றிருத்தல்;<br><br>மற்றும்<br><br>க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (01 பாடத்திலாவது பொது சாதாரண பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்;<br><br>உள்ளக விண்ணப்பதாரிகள் PL1 மற்றும் PL2 சம்பளக்குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு 5 வருடங்களை பூர்த்திசெய்துள்ளவர்களாயின், சேவைக்காலம் நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் மொழி மற்றும் கணிதம் ஆகிய இரு பாடங்களில் திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (இதில் ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.) |
| 3. | பார பொறித்தொகுதி இயக்குநர் | ரூபா 25,250-10X270-10X300-10X330-10X350 - ரூபா 38,450 | 01 | ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/ஆண்டு 9 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.<br><br>மற்றும்<br><br>தொழில்சார் தகைமைகள் :<br>பார வாகன சாரதி அனுமதிப்பத்திரம் (நிகர நிறை 24 அந்தரிற்குக்கூடிய பார வாகனங்கள் மற்றும் பார ரெயிலர் மற்றும் 32 பயணி களுக்குக்கூடிய பஸ்வண்டியை செலுத்தக்கூடிய மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட நிபுணத்துவசான்றிதழ் அல்லது ''ஏ'' வகுப்பு |

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்தித்திற்கு அமைய "டி" வகுப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>ஆகக் குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும். பார பொறித்தொகுதி/கல்ரோலர் இயக்குவது பறிற் மூன்றாம், வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட NVQ 4 ஆம் மட்டத்திற்குரிய சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>மோட்டார் பொறித்தொகுதி விஞ்ஞானம் பற்றிய ஆரம்ப அறிவிருத்தல் வேண்டும்.<br><br>அனுபவம் :<br>பார பொறித்தொகுதி/கல்ரோலர் இயக்குவது பற்றி ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவ மிருத்தல்) |
| 4. | மின்சார கம்பி இணைப்பாளர் | ரூபா 25,250-10X270-10X300-10X330-10X350 - ரூபா 38,450 | 01 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்டாமல் இரண்டு திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (இதில் ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>மற்றும்<br><br>உரிய பதவிக்கு குறிப்பிடப்பட்டவாறு மூன்றாம், வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைகளில் ஆகக்குறைந்தது 2 ஆம் மட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருத்தலுடன் உரிய துறையில் ஆகக்குறைந்தது 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்) |
| 5. | தகன அறை இயக்குநர் | ரூபா 25,250-10X270-10X300-10X330-10X350 - ரூபா 38,450 | 01 | ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/ஆண்டு 9 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பதவிக்கு உரித்தான 02 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். சான்றிதழ்மூலம் நிரூபித்தல் வேண்டும்). |
| 6. | முன்-பள்ளி உதவியாளர் | ரூபா 24,250-10X250-10X270-10X300-10X330 - ரூபா 36,410 | 04 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டுஅமர்வுகளுக்கு மேற்டாமல் இரண்டு திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (இதில் ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்திபெற்றி ருத்தல் வேண்டும்.) |

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 7. | தகன அறை இயக்குநர் உதவியாளர் | ரூபா 24,250-10X250-10X270-10X300-10X330 - ரூபா 36,410 | 01 | ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/ஆண்டு 9 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 8. | சுகாதாரத் தொழிலாளி | ரூபா 24,250-10X250-10X270-10X300-10X330 - ரூபா 36,410 | 06 | ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/ஆண்டு 9 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |

மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்குரிய தகைமைகளுக்கு மேலதிகமாக பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் .

**1. பொதுத் தகைமைகள்:**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு அண்மித்த 03 வருட காலப்பகுதியில் மேல் மாகாண நிரந்தர வதிவாளர் என நிரூபித்தல் வேண்டும். (பண்டாரகமை பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் நிரந்தர வதிவாளர்களிற்கு விசேட கவனம் செலுத்தப்படும்.) வாக்குரிமை பதிவேட்டின்மூலம் அல்லது பிரதேச செயலாளர் சான்றுபடுத்துகின்ற கிராம அலுவலரின் சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியான 17.08.2018 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏலவே அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ளோரிற்கு மேற்குறிப்பிடப்பட்ட வயதெல்லை ஏற்படைத்தாகாது.)

(iii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமும்/சிறந்த நன்னடத்தையும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) குற்றச் சட்ட கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டிக்கப்பட்டவராக இருக்கக்கூடாது.

(v) விண்ணப்பதாரிகள் பரம்பரையாவோ பதிவின்மூலமோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(vi) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு அண்மித்த 05 வருட காலப்பகுதிக்குள் குற்றத்திற்காக (எச்சரிக்கை தவிர்ந்த) தண்டனை பெறாதவராகவும் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

(vii) அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்கள் விண்ணப்பிக்கும் போது, அரச சேவையிலிருந்து அல்லது மாகாண அரச சேவையிலிருந்து அல்லது அரச சட்டத்தின் கீழான சபைகள்/கூட்டுத்தாபனங்கள் சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

**2. சேவை நியதிகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;

(ii) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்கள் மூன்று வருட தகுதிகூர் காண் நிலைக்கு ஆட்படுவர் /தரமுயர்த்தப்படுமாயின் ஒரு வருட பதிற் கடமையாற்றும் காலவெல்லைக்கு ஆட்படுவர் ;

(iii) மேற்கூறப்பட்ட பதவிகளின்கீழ் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவோர் விதவைகள்/ தபுதாரர்/ அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(iv) இவ்வூழியர்கள் இடமாற்றத்திற்கு ஆட்படுவர். உள்ளூராட்சி நிறுவனங்களுக்குள் இடமாற்றும் தத்துவம் அவ்வவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாக தலைவருக்கே உரியதாகும். மேலும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையில் இடமாற்றம் செய்தல் அவ்வவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களின் சம்மதத்தின் மீது உள்ளூராட்சி ஆணையாளரினால் நடைபெறும். கடமை நேரங்கள் மற்றும் கடமையில் ஈடுபடுதல் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனத் தலைவருக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களுக்கமைய தீர்மானம் எடுக்க முடியும் .

(v) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும் தாபனக் கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் அரச அல்லது மாகாண சபை அல்லது திணைக்கள கட்டளைகளுக்கும் காலத்திற்குக்காலம் விநியோகிக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் அனுகூலமாக செயற்படுவதற்கும் நியமனம் பெற்றோர் கட்டுப்பட்டவராவார்.

**03 ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதம்:**

i. ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் சட்டவிதிகளுக்கமைய எழுத்துமூல/கட்டமைக்கப்பட்ட பரீட்சை பெறுபேறுகளின்மீது அல்லது செயன்முறை பரீட்சையின் திறமைகள்மீது தகைமைகள் பெறுவோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர்.

ii. ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதிகளுக்கமைய எழுத்துமூல/கட்டமைக்கப்பட்ட பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சை அல்லாத பதவிகளுக்காக நேர்முகப்பரீட்சையின்மூலம் புள்ளிகள் மற்றும் தகைமைகள் மீது தேர்ந்தெடுக்கப்படுவர்.

**04 விண்ணப்பிக்கும் விதம்:**

i. விண்ணபப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்:-

(1) பிறப்புச் சான்றிதழ்;
(2) தேசிய அடையாள அட்டை;
(3) ஆரம்ப கல்வித் தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்கள்;
(4) தொழில்சார் அல்லது அனுபவங்களை நிரூபிக்கும் ஆவணங்கள்;
(5) தங்கள் வதிவை நிரூபிக்கும் பொருட்டு அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்.

ii. ஆரம்ப தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்:

iii. விண்ணபப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றஞ்செய்தல் அல்லது ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நியமித்திருந்த பதவி எண்ணிக்கைகளை திருத்துதல்/ தீர்மானித்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் பண்டாரகமை பிரதேச செயலாளருக்கே உரித்தானதாகும்;

iv. (அ) முன்பள்ளி பராமரிப்பாளர்கள் மற்றும் சுகாதார நிருவாகத்தர் பதவிகளுக்கான எழுத்துமூலப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய முன்னுரிமைபெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றச் செய்து தகைமைகள் பரீட்சிக்கப்படுவர்.

(ஆ) துறைக்குரிய காரணிகள் பற்றிய அறிவை பரீட்சிப்பதற்கு 2 மணித்தியால வினாத்தாளைக் கொண்டுள்ளது.

v. விண்ணபப்பப்படிவம் இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுப்பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை வர்த்தமானி அறிவித்தலில் குறித்துள்ளதுபோல் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் 04 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

vi. தற்போது அரச வேையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவன தலைவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணபப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். நியமித்த திகதியிற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

என். டி. ஐ. எஸ். கே. பெரேரா,
செயலாளர்,
பண்டாரகமை பிரதேச சபை.

பண்டாரகமை பிரதேச சபை,
பாணந்துறை வீதி,
பண்டாரகமை.
2018, யூலை 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பண்டாரகமை பிரதேச சபை ....................................................................... பதவி**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ..........................................................................

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ..........................................................................

3. நிரந்தர விலாசம் : ..........................................................................

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ..........................................................................

5. பிறந்த திகதி : ஆண்டு: .................... மாதம் : ............................. திகதி : .............................

6. விண்ணப்ப முடிவுத் திகதியான 17.08.2018 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : .................................. மாதங்கள் : .................................. நாட்கள் : ..................................

7. பால் (ஆண்/பெண்) : ..................................

8. விவாகமானவரா? விவாகமாகாதவரா?..............................................................

9. தேசிய இனம்:.................................................................

10. பண்டாரகமை பிரதேச சபையில் தற்போது சேவையாற்றுகின்றீராயின்,

வகிக்கும் பதவி :.................................. சேவைக்காலம் : .................................... அப்பதவி நிரந்தரமானதா/ தற்காலிகமானதா/அமயமா/ஒப்பந்தமா முதலியன ...................................

11. நீர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பரம்பரை மூலமாகவா? பதிவின் மூலமாகவா? ....................................

12. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) : ....................................

13. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் : ..........................................................................

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.................................... ..................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ....................................

(விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பவராயின்)

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./ திருமதி/செல்வி ..............................................................தற்போது இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் (நிரந்தர/அமய/பதிலீட்டு/ஒப்பந்த) அடிப்படையில் ...................... ஆக சேவையாற்றுகிறார். அவர் விண்ணப்பிக்கும்

பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன்.

.....................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : .....................................................

பதவி : .....................................................

திணைக்களம்/நிறுவனம் : .....................................................................................................

(பதவி முத்திரை இடவும்)

திகதி : .....................................................

8 - 142

---

## அத்தனகல்ல பிரதேச சபை

மேல் மாகாண அரச சேவையில் அத்தனகல்ல பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழ் குறிப்பிடப்படும் வெற்றிடங்களுக்கு உரிய தகைமைகளைக் கொண்ட மேல் மாகாண சபையினுள் நிரந்தர வதிவைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகளும் மற்றும் ஆட்சேர்ப்புத் தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 1. | நூலக உதவியாளர் தரம் - III | 02 | ரூ. 24,250-10X 250-10X 270-10X 270-10X 300 - 12X 330 - ரூ. 36,410 அ. நி. சு. 01/2016 | கல்விப் பொதுச் சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம்/ தமிழ் மொழி உள்ளடங்கலாக திறமைச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் - (ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் குறைந்தபட்சம் சித்தியடைந்து இருத்தல்). |
| 2. | துப்பரவேற் பாட்டு ஊழியர் தரம் - III | 03 | ரூ. 24,250-10X 250-10X 270-10X 270-10X 300 - 12X 330 - ரூ. 36,410 அ. நி. சு. 01/2016 | 8 ஆம் வகுப்பு (9 வருடம் சித்தியடையதல்) |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 3. | வேலை/ வெளிக்கள தொழிலாளர்கள் தரம் - III | 02 | ரூ. 24,250-10X 250-10X 270-10X 270-10X 300 - 12X 330 - ரூ. 36,410 அ. நி. சு. 01/2016 | 8 ஆம் வகுப்பு (9 வருடம் சித்தி யடையதல்) |
| 4. | அலுவலக உதவியாளர் தரம் - III | 01 | ரூ. 24,250-10X 250-10X 270-10X 270-10X 300 - 12X 330 - ரூ. 36,410 அ. நி. சு. 01/2016 | கல்விப் பொதுச் சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம்/தமிழ் மொழி உள்ளடங்கலாக திறமைச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் - (ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் குறைந்தபட்சம் சித்தியடைந்து இருத்தல்). |
| 5. | காவலாளர் | 03 | ரூ. 24,250-10X 250-10X 270-10X 270-10X 300 - 12X 330 - ரூ. 36,410 அ. நி. சு. 01/2016 | கல்விப் பொதுச் சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம்/தமிழ் மொழி உள்ளடங்கலாக திறமைச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் - (ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் குறைந்தபட்சம் சித்தியடைந்து இருத்தல்). |
